## எல்ல பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூலை 08 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு எல்ல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டின் போது காணிகள் மற்றும் கட்டிடங்கள் என புது சபை கட்டிடங்களின் பெறுமதி ரூபா 1,777,665 தொகை கூடுதலாக மூலதனப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 5 கணனிகளின் பெறுமதியினை கணக்கீடு செய்யும் போது ரூபா 74,000 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 33,600 தொகை பெறுமதியான பொறியும் பொறித்தொகுதியினை நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது பண்டாரவெல பிரதேச சபையினால் ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 217,474 தொகை பெறுமதியான கல்வணய்ஸ் கொடிக் கம்பங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) முன்னைய ஆண்டுகளின் போது கணக்கீடு செய்திருந்த ரூபா 4,270,000 தொகை பெறுமதியான 3 மோட்டார் வண்டிகள் மற்றும் வண்டிகள் மீண்டும் மீளாய்வாண்டிற்கானன் கொள்வனவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது மத்திய அரசில் இருந்து நன்கொடையாக சபைக்குக் கிடைத்திருந்த 03 வாகனங்களின் பெறுமதியாகிய ரூபா 9,761,032 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது சபையினால் கொள்வனவு செய்திருந்த ரூபா 67,500 தொகை பெறுமதியான 03 குப்பை வண்டிகளை நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடன் பெறுமதி ரூபா 5,090,374 தொகை குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஐ) முன்னைய ஆண்டின் போது தீர்க்கப்படாதிருந்த முற்பணங்கள் என குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த தொகையை மீளாய்வாண்டின் போது குறிப்புக்களின் மூலம் சீராக்கல் செய்யப்பட்ட காரணத்தினால் ஆண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிதியம் மற்றும் முற்பணக் கணக்கு மீதி ரூபா 575,266 தொகை மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஒ) முன்னைய ஆண்டின் போது பெற்றிருந்த நீதி மன்றத் தண்டப் பண பெறுமதி ரூபா 620,084 தொகை மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டின் போது பணமாக கிடைத்திருந்த நீதி மன்றத் தண்டப் பணப் பெறுமதி ரூபா 554,353 இனை மீண்டும் மீளாய்வாண்டின் ஏனைய வருமான நிலுவை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு நீதிமன்றத் தண்டப்பண கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் போது சபையில் கடமையாற்றும் 15 அலுவலர்கள் தொடர்பாக பிணை வைத்திருந்த ரூபா 91,273 தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(க) மீளாய்வாண்டு தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய மொத்தப் பங்களிப்புத் தொகையாகிய ரூபா 32,805 தொகையை கணக்கீடு செய்யாமையால் நிதிக் கூற்றுக்களில் பற்றாக்குறை அப் பெறுமதியினை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ச) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,085,177 தொகையினை செலுத்த வேண்டிய செலவு ஒன்று என கணக்கீடு செய்யப்படாமையால் நிதிக் கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்கள் அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 51,091,045 தொகையான 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே காணப்பட்ட வித்தியாசங்களில் கூட்டுத்தொகை ரூபா 16,895,948 ஆக இருந்தது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 26,569,145 தொகையாக காணப்பட்டதுடன் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 34,892,397 தொகையாக இருந்தது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

ரூபா 55,911,431 தொகை பெறுமதியான 04 கணக்கு விடயங்கள், விரிவான பட்டோலைகள் மற்றும் கணிப்பீட்டு சபை அறிக்கைகள் என்பன சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 47(2) (1), (3)(1) ஆம் பிரிவுகள் மற்றும் 49 ஆம் பிரிவு | கட்டிட நிர்மாண வேலைகள் தொடர்பாக இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் சபை அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த 75 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக சபையினால் சட்ட நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் 2008 ஜனவரி 25 திகதிய 1523∴16 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் | 2015 ஆண்டிற்கான சுற்றாடல் சார் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனங்களை இனங்காண்பதற்காக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 217 | சபையினால் பயன்படுத்தும் மற்றும் சபையினால் வதிவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ்.46 படிவத்தின் பிரகாரம் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 218 | கணிப்பீட்டுச் சபை ஒன்றின் மூலம் சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீளாய்வாண்டு தொடர்பாக கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2009 செப்டம்பர் 18 திகதிய PF/437 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 04 வாகனங்கள் தொடர்பாக ரூபா 170,998 தொகை பெறுமதியான மோட்டார் வாகனங்களுக்காக காப்புறுதிக் காப்பு, காப்புறுதி முகவர் மூலம் பெறப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (உ) | 2002 நவம்பர் 28 திகதிய IAI2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | 10 கணனிகள் தொடர்பாக சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,106,105 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,709,589 தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

--------------------------------------------------------------

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டுகள் தொடர்பாக பிரதேச சபை நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 2,641,975 தொகை ஆகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானத்தில் ரூபா 3,701,191 தொகை அதாவது 40மூ அத் தினத்தில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்டது.

2.2.2 கடை வாடகை

-----------------------------

(அ) சபைக்குச் சொந்தமான 09 கடைகளின் வாடகையாளர்கள் ரூபா 405,006 தொகையான வாடகை செலுத்துவதை புறக்கணித்திருந்தனர். அத்துடன் நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஆண்டின் போது கடைகளுக்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் புதிய பெறுமதி மதிப்பீடு ஒன்று வழங்கியிருந்த போதிலும், பழைய பெறுமதி மதிப்பீட்டு பெறுமதிக்கே அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 773,349 தொகையும் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 5,575,916 தொகை ஒன்றும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

--------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான தெமோதர கற்குழியினை 2004 ஆண்டிற்காக குத்தகைக்கு எடுத்துள்ள குத்தகையாளரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 348,810 தொகையான நிலுவை குத்தகை 2015 திசெம்பர் 31 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

--------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான பெக்கோ லோடரின் எரிபொருள் எரிவு மீது முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அவ் இயந்திரம் சபையின் பொறுப்பு வாய்ந்த தொழில்நுட்ப அலுவலர் ஒருவரின் மேற்பார்வை இன்றியும் வேலைத்தள மதிப்பீடு தயாரித்தல் இன்றியும் மீளாய்வாண்டின் போது 518.6 இயந்திர மணித்தியாலங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1982 இன் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைக் சட்டத்தின் 8ஒ(1) இன் பிரகாரம் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக சபையினால் தண்டப் பணம் அறவிடப்பட வேண்டும். எனினும், அங்கீகாரமற்ற நிர்மாண வேலை ஒன்றான சுற்றுலா ஹோட்டல் ஒன்றில் இருந்து ரூபா 1,426,920 தொகையான தண்டப் பணம் அறவீடு செய்திருக்கவில்லை. சுற்றுலா ஹோட்டலின் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென 2016 ஜுன் 10 திகதி தலைவர் எனக்கு அறவித்திருந்தார்.

(இ) சபையின் நடைமுறைக் கணக்கு ஒன்றில் 2015 ஆண்டின் ஒவ்வொரு மாத இறுதியிலும் 30 இலட்சத்தை மிகையான மீதி ஒன்று காணப்பட்ட போதிலும் மிகையான பணத்தினை பொருத்தமான முதலீடு வழி ஒன்றில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 ஒப்பந்த நிருவாகம்

---------------------------------

சபைக்காக திட்டமிட்டிருந்த புதிய சபைக் கட்டிடம், தேசிய கட்டிய ஆய்வு நிறுவனத்தினல் வெளியிடப்பட்டிருந்த இசைவுச் சான்றிதழில் காணப்பட்ட நிபந்தனைகளுக்கு இணக்கமின்றி சபை தீர்மானம் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட மேடு பள்ளமான தரைப்பகுதி ஒன்றில் நேர் நிர்மாண வேலையின் கீழ் அரைப் பங்கு அளவு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் மாதத்தில் இத்தரைக்கு மேற்பகுதியில் மண்சரிவு ஒன்று ஏற்பட்டு அவற்றில் மண் மற்றும் சிதைவுகள் புதிய கட்டிடத்தின் பின் பகுதியில் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் குவிந்திருந்தமையால் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த கட்டிடத்திற்கு சேதம் ஏற்பட்டிருந்தது. அத்துடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,222,335 தொகை ஒன்று அர்த்தமற்ற செலவொன்றாகியிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

சபையினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு வருமானம் மற்றும் செலவுக் கட்டுப்பாட்டில் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

---

வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும் எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) வாகனக் கட்டுப்பாடு